கலைஞர் 100 1924 - 2023

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - *641 003*

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: *94890 56730*

தொலைபேசி: *0422 - 6611302*
நிகரி: *0422 - 2431821*
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: *29.10.2025*
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## <u>தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்</u>
## வெற்றி நிச்சயம் நான் முதல்வன் திட்ட பயிற்சிகள்

### பசுமைக்குடில் கட்டுமானம் மற்றும் பயிர் சாகுபடி குறித்த சிறப்பு பயிற்சி

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பாக பசுமைக்குடில் கட்டுமானம் மற்றும் பயிர் சாகுபடி குறித்த சிறப்பு பயிற்சி விரைவில் நடைபெற உள்ளது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியில் பசுமைக்குடில் அமைப்பு, கட்டுமானப் பொருட்களின் தேர்வு, பாசன முறை, தாவர மேலாண்மை, நோய் மற்றும் பூச்சி கட்டுப்பாடு, சந்தைப்படுத்தல் ஆகிய தலைப்புகள் குறித்து நிபுணர்கள் வழிகாட்டுவர். பயிற்சி அக்டோபர் 30 முதல் நவம்பர் 28 வரை நடைபெறும். இதில் கலந்து கொள்ள விரும்புவோர், அக்டோபர் **30**க்குள் தங்களின் பெயர், முகவரி, தொடர்பு எண் ஆகிய விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். பயிற்சியில் பங்கேற்க குறைந்தது 12ஆம் வகுப்பு கல்வி தகுதி பெற்றவராக இருக்க வேண்டும். வேளாண், தோட்டக்கலை, பாலிடெக்னிக் அல்லது பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இப்பயிற்சியின் மூலம் தொழில்முனைவு மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த வழிகாட்டலும் வழங்கப்படும்.

**மேலும் விவரங்களுக்கு:**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
மண் மற்றும் நீர் வளப்பாதுகாப்பு பொறியியல் துறை,
வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை–3
மின்னஞ்சல்: swc@tnau.ac.in
தொலைபேசி எண்: 9789982772

**திறன் சார்ந்த காளான் வளர்ப்பு பயிற்சி**

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வெற்றி நிச்சயம் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 25 நாட்கள் இலவச திறன் சார்ந்த காளான் வளர்ப்பு பயிற்சி **27.10.2025 முதல் 25.11.2025** வரை நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் கோவை மாவட்டத்தை சார்ந்த பட்டதாரி, டிப்ளமொ, விவசாயிகள் மற்றும் பெண்கள் பங்கு கொள்ளலாம்.

வயது வரம்பு: 18 முதல் **45** வரை

**மேலும் தொடர்புக்கு:**

0422-6611336
96269496555
6379298064

**தித்திப்பூட்டும் இலவச தேனீ வளர்ப்பு பயிற்சி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர்ப் பாதுகாப்பு மையத்தின் கீழ் இயங்கும் வேளாண் பூச்சியியல் துறையில் தமிழக அரசின் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் வாலிபர்களை வெற்றியாளர்களாக்கும் நோக்கத்தில் இலவச தேனீ வளர்ப்பு பயிற்சி தொடர்ந்து 26 நாட்கள் **27.10.2025** முதல் வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் 25 நபர்களுக்கு வணிகரீதியில் தேனீ வளர்ப்புக் குறித்த அனைத்து தொழில்நுட்பங்களும் விளக்கமாக கற்றுத்தரப்படும். இதில் பங்கு பெற 18–35 வயதுக்குட்பட்டவர்களாய் இருத்தல் அவசியம். மேலும் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவோர் 26 நாட்களும் தொடர்ந்து கலந்து கொள்ள வேண்டும். பயிற்சி பெற விரும்புவோர் ஆதார் நகல் எடுத்து வர வேண்டும். பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தங்களின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்களைத் தொடர்பு கொண்டு 24.10.2025 தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தொடர்புக்கு: 9363529576; 9486893905: 9176690292: 9894383412.

***இலவச திறன் சார்ந்த மண்புழு உரத் தயாரிப்பு பயிற்சி***

*கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் உழவியல் துறை சார்பில் தமிழக அரசின் ‘‘வெற்றி நிச்சயம்’’ நான் முதல்வன் திட்டத்தின் கீழ் **26** நாட்களுக்கு ‘‘இலவச திறன் சார்ந்த மண்புழு உரத் தயாரிப்பு பயிற்சி’’ வழங்கப்பட உள்ளது. இப்பயிற்சி **30.10.2025 முதல் 28.11.2025 வரை** நடக்கும். இப்பயிற்சி முகாமில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரி, டிப்ளமோ, விவசாயிகள் மற்றும் பெண்கள் பங்கேற்கலாம். வயது வரம்பு **18** முதல் **35** வரை உள்ளவர்கள் அனைவரும் இப்பயிற்சியில் பங்கேற்கலாம். இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள், பேராசிரியர், உழவியல் துறை அவர்களை **9443209452, 9842562975** ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு அக்டோபர் **28** ஆம் தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ளலாம். பயிற்சிக்கு வரும் போது ஆதார் அட்டை நகலை எடுத்துவர வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.*

**தரமான விதை உற்பத்தியாளர் பயிற்சி**

கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை, விதை மையம் மூலம் தமிழக அரசின் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் "நீங்களும் ஆகலாம் தரமான விதை உற்பத்தியாளர்'' என்ற தலைப்பில் பயிற்சி வழங்கப்பட உள்ளது. இந்த பயிற்சியில் பங்கேற்க ஆர்வம் உள்ள இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். முன்பதிவு இன்று முதல் வரும் 27.10.2025 தேதிக்குள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை பேராசிரியரை நேரிலோ அல்லது **9952176477** என்ற கைபேசி எண் மூலம் அணுகி பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். மாவட்டத்தில் மொத்தம் **25** பேருக்கு இந்த பயிற்சி வாய்ப்பு வழங்கப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட பயிற்சியாளர்களுக்கு **26** நாட்கள் பயிற்சி தரப்படும்.

இந்த பயிற்சியின் போது, விதை உற்பத்தியாளராக தேவையான அனைத்து விவரங்களுமான விதைத் தேர்வு, சுத்திகரிப்பு, பயிர் பராமரிப்பு முறைகள், சான்றிதழ் பெறும் நடைமுறைகள், விதை சேமிப்பு மற்றும் விற்பனை வழிமுறைகள் வழங்கப்படும். பயிற்சியில் பங்கேற்பதற்கு **18** முதல் **35** வயதிற்கு உள்ள இளைஞர்கள் மற்றும் விவசாயிகளுக்கு அழைப்பு விடப்படுகின்றது. பயிற்சி முடிவில் பங்கேற்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். இந்த அரிய வாய்பை பயன்படுத்திக் கொண்டு தரமான விதை உற்பத்தி செய்யும் திறமையை வளர்த்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு கோயம்புத்தூரில் உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விதை அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை, தொடர்பு கொள்ளலாம். குறிப்பு: ஆதார் அட்டை நகலை எடுத்து வரவும்

**திறன் மேம்பாட்டு இலவச ''பழங்கள் மற்றும் காய்கறிகள் மதிப்பு கூட்டுதல் மற்றும் பதப்படுத்துதல்'' பயிற்சி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் திறன் மேம்பாட்டு இலவச ''பழங்கள் மற்றும் காய்கறிகள் மதிப்பு கூட்டுதல் மற்றும் பதப்படுத்துதல்'' பயிற்சி **30.10.2025** முதல் **26.11.2025** வரை ஆகிய இரண்டு நாட்களில் காலை **9.00** மணி முதல் மாலை **5.00** மணி வரை நடைபெறும். கீழ்கண்ட தலைப்புகளில் பயிற்சி வழங்கப்படும்.

- பழம் மற்றும் காய்கறி மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல்
- பதப்படுத்தல் மற்றும் உணவு பாதுகாப்பு நுட்பங்கள்
- செய்முறை அடிப்படையிலான நடைமுறை பயிற்சி
- வங்கி கடன் பெறும் வழிமுறைகள்

**தகுதி**

- வயது வரம்பு:18-35
- கல்வி: 8 ஆம் வகுப்பு தேர்ச்சி

ஆர்வமுள்ளவர்கள் பயிற்சிக்கு முன்னதாகவே தங்களது பதிவை உறுதிபடுத்தி கொள்ளவும். மேலும் பதிவு செய்வதற்கு தங்களது தொலைபேசி எண், ஆதார் எண், மின்னஞ்சல் ஐடி மற்றும் கடவுச்சீட்டு அளவு புகைப்படம் அனைத்தும் பதிவு நேரத்திற்குள் அனுப்ப வேண்டும்.

பதிவு தேதி: 29.10.2025 (9.00 AM)

**பேருந்து நிறுத்தம்:** வாயில் எண்.7, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை வழியாக, கோயம்புத்தூர் - 641003

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**:

பேராசிரியர் மற்றும் தலைவர்,
அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம்,
வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்– 641 003.
தொலைபேசி எண்-9791177578, 0422-6611268
மின்னஞ்சல்-phtc@tnau.ac.in

**மக்கள் தொடர்பு அலுவலர்**